©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 7, 2011
கார்த்திகை 21, திருவள்ளுவர் ஆண்டு–2042

# பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 31/2011.**

**2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 19/2009.** **2.** 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. **நீக்கம்.**

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 32/2011.**

**2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

**2.** 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4ஆம் பிரிவில் (2)ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(bb) மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கும் நிலுவையிலிருக்கும் மொத்த கடன்தொகைக்கும் உள்ள விகிதத்தை 2011–2012 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 24.5 விழுக்காடு என்ற அளவிற்கும், 2012–2013 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 24.8 விழுக்காடு என்ற அளவிற்கும் 2013–2014 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 25.0 விழுக்காடு என்ற அளவிற்கும், 2014–2015 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 25.2 விழுக்காடு என்ற அளவிற்கும் மிகாதவாறான இடைக்கால இலக்குடன் பேணிவருதல் வேண்டும்; அதன் பின்னர் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு நூற்றுக்கு அத்தகைய விழுக்காடு என்ற அளவில் பேணிவருதல் வேண்டும்.''

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.